2003 ஏப்ரல் 21]

தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முசிறியிலே மீண்டும் கூடுதலாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே திருச்சியிலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இயங்கி வருகிறது. அதற்கு அடுத்தபடியாக, 1999 ஆம் ஆண்டு முதல் பகுதி அலுவலகமாக இருந்த ஸ்ரீரங்கத்தை இப்போது, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தகுதி உயர்த்தி, ஸ்ரீரங்கத்திலும் ஒரு தனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் நடைபெற்று வருகிறது. ஆகவே திருச்சி மாவட்டத்திற்கு இரண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இப்போது இயங்கி வருகின்றன. எனவே மூன்றாவது அலுவலகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இப்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 275, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

275—

அகல இரயில் பாதை

***23944—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகரிலிருந்து சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம், காங்கேயம், தாராபுரம் வழியாக பழனிக்கு அகல இரயில் பாதை அமைப்பதற்கு மைய அரசைத் தமிழக அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பெங்களூர்-சத்தியமங்கலம் புதிய அகல இரயில் பாதை மற்றும் மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்கப்பட்ட மைசூர்-சாம்ராஜ் நகர் அகல இரயில் பாதை மாற்றம் ஆகியவை, ஏற்கெனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டங்களில், சாம்ராஜ் நகர், சத்தியமங்கலம் பிரிவும் அடங்கும். இவை தவிர, சத்தியமங்கலத்திலிருந்து கோபிசெட்டிப்பாளையம், காங்கேயம், தாராபுரம் வழியாக பழனி

[2003 ஏப்ரல் 21

வரை உள்ள பகுதியினை ஆய்வு செய்ய, இரயில்வே துறையால் தற்போது ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தையும், தமிழகத்தையும் இணைக்கும் இந்த முக்கியமான சாலையை இரயில் பாதையின் மூலமாக அமைப்பார்களானால், அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கெல்லாம் அதிக அளவிலே உபயோகமாக இருக்கும் என்பதால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் இதை வலியுறுத்தி, கோபிசெட்டிப்பாளையம் வழியாக பழனி வரையில் அகல இரயில் பாதைக்கு மைய அரசை வலியுறுத்துவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலத்திலிருந்து திருப்பூர், தாராபுரம் வழியாக பழனிக்கு குறுகிய இரயில் பாதை அமைக்கும் பொருட்டு, இரயில்வே துறையால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த அறிக்கையில் சத்தியமங்கலம், திருப்பூர், தாராபுரம், பழனி மற்றும் சத்தியமங்கலம், திருப்பூர், காங்கேயம், தாராபுரம், பழனி ஆகிய இரு மாற்று வழி இரயில் பாதைகளுக்கும், திரும்புகைப் பயன் முறையே 2.76 விழுக்காடும் மற்றும் 4.8 விழுக்காடுமாக இருந்தன. எனவே போதுமான திரும்புகைப் பயன் இல்லாத காரணத்தாலும், நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாகவும், இரயில்வே துறை இத்திட்டத்தை—இரயில்வே வாரியம் இத்திட்டத்தை -- தற்போது ஒத்திவைக்கத் தீர்மானித்துள்ளது. இருந்துபோதிலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மத்திய இரயில்வே அமைச்சகத்தையும், இரயில்வே வாரியத்தையும் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று இன்றைக்கும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 276, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.